# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, யூலை மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

[*2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 31/2013*

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூரதிகாரசபைகளின் மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் என்ற பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநகர முதல்வர் முதலியவர்களின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.*

**2.** இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வந்த தேதிக்கு நேர் முற்போந்த தேதியன்று நடைமுறையில் உளதாயிருந்த (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் உள்ளூரதிகாரசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் அல்லது ஓர் உறுப்பினர் என்ற பதவியிலான வெற்றிடமொன்றை நிரப்புகின்ற நோக்கத்திற்காக 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் இயைபான ஏற்பாடுகள் நீக்கப்பட்டமை அல்லது திருத்தப்பட்டமை எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், வெற்றிடமொன்று, 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் சொல்லப்பட்ட

2-PL 007410 -1115 (2013/07)

கட்டளைச் சட்டத்தில் உட்புகுத்தப்பட்ட 66ஆ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் சூழ்நிலைகளில் மாநகர முதல்வர் பதவியில் ஏற்படுகின்றவிடத்து, அப்போது அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் அது தொடர்பில் ஏற்புடையன வாதல் வேண்டும்.

சட்டத்தின் காலப்பகுதி.

**3.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து தொடங்கி நான்காண்டு காலப்பகுதியொன்றிற்கு வலுவில் இருத்தல் வேண்டும்.

செல்லுபடியாக்குதல்.

**4.** 2013, சனவரி 1 ஆம் தேதி தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடங்குகின்ற தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது, 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று நடைமுறையிலிருந்த (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நிரப்பப்பட்ட மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் அல்லது உறுப்பினரின் ஏதேனும் பதவி வெற்றிடமானது வலிதாக நிரப்பப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**5.** இச்சட்டத்தில்–

“பிரதி மாநகர முதல்வர்” என்பது, மாநகர சபையொன்றின் பிரதி மாநகர முதல்வர் அல்லது நகர சபையொன்றின் அல்லது பிரதேச சபையொன்றின் பிரதித் தவிசாளர் என்று பொருளாகும் ; அத்துடன்

“மாநகர முதல்வர்” என்பது, மாநகர சபையொன்றின் மாநகர முதல்வர் அல்லது நகர சபையொன்றின் அல்லது பிரதேச சபையொன்றின் தவிசாளர் என்று பொருள் படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்